பிட்ட பிரச்சனைகளைச் சொல்லி வேண்டுமானால் கேட்கலாம். அந்த ஊரில் உண்டா, இந்த ஊரில் உண்டா என்று கேட்டால் அமைச்சரிடம் அதற்கான பதில் இருக்காது.

திரு. என். வரதராஜன் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பெரிய நகரங்களான மதுரை, கோவை, சேலம், திருச்சி போன்ற இடங்களில் பல மாடிக் கட்டடங்கள் உயர்ந்து வருகின்றன. இன்றைக்கு இருக்கிற வசதிகளைக்கொண்டு அவைகளில் ஏற்படுகிற தீயை அணைக்க முடியாத நிலைமை இருக்கிறது. ஆகவே இந்த நவீன தீ அணைப்பு இயந்திரத்தை அந்தப் பகுதிகளுக்கு விஸ்தரிக்கவும், அடிக்கடி தீ விபத்து ஏற்படுகிற பெரிய தொழிற்சாலைகள், நூற்பாலைகள், தீப்பெட்டித் தொழிற்சாலைகள் இருக்கின்ற பகுதிகளுக்கும் இந்த வசதியை விஸ்தரிக்கவும் அரசு தொடர்ந்து முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இந்த தீ அணைப்பு எஞ்சின் விலை 18, 22, 442 ரூபாய் ஆகிறது. இதை வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருப்பதால் அந்நியச் செலாவணி தேவைப்படுகிறது. ஆகவே, மத்திய அரசின் ஒப்புதலோடு அவர்கள் மூலமாகத்தான் வாங்க வேண்டியிருக்கிறது. முதலில் இந்த ஒரு எஞ்சினை வாங்கிப் பார்ப்போம். அதன் அனுபவத்தைப் பார்த்து, மற்றவைகளைப் பார்ப்போம்.

குடியாத்தம் காவல் நிலையக் கட்டடம்.

* வினா எண் 361—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குடியாத்தம் காவல் நிலையம் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் புதிதாகக் கட்ட வேண்டுமென்று கருதி எப்போது இடிக்கப்பட்டது?

(ஆ) இதற்கான புதிய கட்டடம் எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) குடியாத்தம் நகர் காவல் நிலையம் பழுதடைந்துவிட்ட காரணத்தினால் அரசு ஆணை எண் 2459 உள்துறை நாள் 22.9.72-ன்படி இடிக்கப்பட்டது. தற்போது, இக்காவல் நிலையம் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

(ஆ) புதிய காவல் நிலையக் கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு அரசின் புதிய கட்டட வேலைக்கான தடை உத்தரவு நீக்கிய பிறகு எடுத்துக்கொள்ளப்பட இருந்தது. இருப்பினும், இதன் அவசியத்தை உணர்ந்து இது பற்றிய வரைவுப் படம் மற்றும் மதிப்பீடுகள் அடங்கிய செயற்குறிப்புகளைக் காவல் துறைத் தலைவர் அனுப்பியிருக்கிறார். அவை அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

1979 மார்ச் 13]

[முற்பகல் 9.10]

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், இந்தக் கட்டடம் இடிக்கப்பட்டு 10 வருடங்களுக்கு மேலாகிறது. அங்கே டவுன் போலீஸ் ஸ்டேஷனும் தாலுகா போலீஸ் ஸ்டேஷனும் வாடகை கட்டடத்தில்தான் இருக்கிறது. வசதி படைத்தவர்கள் கட்டி இருக்கின்ற கட்டடங்களுக்கு வாடகையைக் கொடுத்துக் கொண்டுதான் இருக்க வேண்டுமா? அல்லது உடனடியாக அரசு சொந்தக் கட்டடத்தை கட்டி அதில் காவல் நிலையத்தை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, டவுன் போலீஸ் ஸ்டேஷன், தாலுகா போலீஸ் ஸ்டேஷன், சர்கிள் இன்ஸ்பெக்டர் ஆபீஸ் இந்த மூன்றுக்குமாகச் சேர்த்து கட்டடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு ரூபாய் 2 இலட்சத்து 91 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதாவது கிட்டத்தட்ட 3 இலட்ச ரூபாய். இந்தத் திட்டத்திற்கு அரசு இன்னும் அனுமதி வழங்கவில்லை. அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. வாடகை என்கிற அளவில் நகரக் காவல் நிலையத்திற்கு 120 ரூபாயும் ரூரல் காவல் நிலையத்திற்கு 250 ரூபாயும் தான் தருகிறோம். ஆகவே முதலீடு என்று பார்க்கிறபோது இந்த வாடகை குறைவானது தான்.

திரு. வி. கே. கோதண்டராமன் : தலைவரவர்களே, இந்தத் திட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். குடியாத்தம் தொகுதி என்ற காரணத்தால் அனுமதி வழங்கப்படவில்லையா? அதற்கு மனம் இல்லையா? மற்றப் பகுதிகளுக்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்படுமா? ஏன் இந்தப் பாகுபாடு? மேலும் அங்கே இருக்கக் கூடிய காவல் துறையினருக்கு வீடுகள் போதிய அளவு இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அந்தக் காவல் துறையினருக்கும் சேர்த்து வீடு கட்டக் கூடிய அளவுக்கும் உடனடியாக அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 1969-லேயிருந்து இந்தக் கருத்து தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மனம் இல்லையா என்று கேட்டார்கள். இதுவரையில் ஒருவேளை மனம் இல்லை என்ற சூழ்நிலை இருந்தாலும் இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குடியாத்தம் தொகுதியின் சார்பாக வந்து இருக்கிற போது இந்த அரசுக்குக் கட்டாயம் மனம் உண்டு. ஆக இந்தத் திட்டத்தை விரைவில் அனுமதிப்பதற்கு அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.